ஸ்ரீ:

விகாரி ஹு புரட்டாசி மீ
ஸெப்டம்பர் - அக்டோபர் 2019

மலர்: 2
இதழ்: 6

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





விகாரி ஸூ புரட்டாசி மீ
செப்டம்பர் - அக்டோபர் 2019

ஸ்ரீ:

மலர்: 2
இதழ்: 6



ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**

1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**

ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri Sudhakar Thirumalai & Sri P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்³ரி ஸமம் ஸ்தா²நம் ப்³ரஹ்மாண்டே³ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே³வோ ந பூ⁴தோ ந ப⁴விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

'ஸர்வாம் கந்யாம் பரித்யஜேத்' (புரட்டாசி மாதம் ஒதுக்கப்படவேண்டியது) என ஒரு ஸந்தர்ப்பத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆடிபோல் புரட்டாசியையும் சூந்யமாதம் எனச் சொல்வர். மயிலை வாழ் மாந்தர்களுக்கு விதி-விலக்கு போலும். ஆவலுடன் காத்திருக்கும் ஆரணதேசிகனின் வார்ஷிகோத்ஸவம் / நவராத்ரிஉத்ஸவம் / திருப்பவித்ர உத்ஸவம் என கோலாஹலம்தான். இவைகளை அநுபவிக்க நேரம் போதாது என்பதற்காகவே, மற்றவைகளை ஒதுக்கச் சொல்லியிருப்பரோ!

'தேசிக ஸந்தேச'த்தின் இம்மாத ஸஞ்சிகை பல சிறப்பான கட்டுரைகளுடனும், புகைப்படங்களுடனும் உங்கள் அனுபவத்திற்காக இதோ வெளிவருகிறது.

இந்த ஸஞ்சிகையில் நாம் அநுபவிக்கவிருப்பது:

❖ கீழ்க்கண்ட உத்ஸவங்களின் புகைப்படங்கள்:

✓ கஜேந்த்ர மோக்ஷம் (ஆடி கருடன்)

✓ ஸ்ரீஜயந்தீ உறியடி உத்ஸவம்

✓ ஸ்ரீஹயக்ரீவ ஜயந்தீ / ஆவணி-ச்ரவண உத்ஸவம்

✓ யஜுர்-ஸாம உபாகர்ம

இவைகளுடன் விசேஷ வ்யாஸங்கள்.

வழக்கமான புரட்டாசி மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம், சிறுவர் பகுதி இவைகளும் இடம் பெறுகின்றன. கண்டு வாசித்து இன்புறுமின்.

சென்ற ஆண்டு நம் ஸஞ்சிகையின் முதல் ப்ரதியைப் படித்த வாசகர்களில் சிலர், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் வெளியிட்டால் பலருக்கு – முக்கியமாக – தற்கால இளைஞர்களுக்கு உபயோகமாக இருக்கும் என கருத்துத் தெரிவித்தனர். இப்போது அதற்கு வேளை வந்ததுபோலும்! 'பாஷாகீதி: ப்ரசஸ்தா பகவதி வசநாத்' (ஸம்ப்ரதாய விஷயங்களைச் சொல்ல எம்மொழியும் ஸம்மதமே - த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி) என்ற ஸ்வாமி தேசிகன் வாக்கை ஒட்டி, இப்புரட்டாசி முதல் ஆங்கிலக் கட்டுரைகளும் ஸஞ்சிகையில் இடம்பெறும் என்பதை தெரிவித்து மகிழ்கிறோம்.

ஸ்ரீ:

# ஓதாதே ஓதுவிக்கும் ஒருவன்

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

தலைப்பு இரு ஸந்தேஹங்களை எழுப்புகிறது – ஒன்று, யார் அந்த ஓதுசவிக்கும் ஒருவன்? இரண்டாவது, ஓதாமல் ஓது வித்தல் என்பது, வார்த்தை யாலேயே முரண்பட்டிருக்கிறதே, என.

இதை, இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். அப்பா! மேலும் கேட்கத் தூண்டவைக்கும் முயற்சி பலித்தது.

வைசம்பாயநர் என்று ஒரு ரிஷி. அரசனான ஜநமேஜயனிடம் ராமாயண-பாரதக் கதைகள் சொல்கிறேன், கேள் என்றார். அவனோ, அதற்கு நேரமில்லை என்றான். ஒரு அத்யாயமாவது கேள், என்றார்; அதற்குக்கூட ஒழிவில்லை என மறுத்தான். ரிஷியும் விடாமல், ஒரு ச்லோகமாவது கேள் என்றார். அரை மனதாக ஒப்புக்கொண்டான். முனிவர், ''உலகிலேயே சிறந்த முட்டாள்கள், துர்யோதநனும்-இராவணனும்தான்; இல்லாவிட்டால் மாடு-விரட்டு / வநம் அழிவு இவற்றைக் கண்ட பின்னரும் திரும்பத் திரும்ப போர் தொடுப்பார்களா!'' என்றார். ச்லோகம் முடிந்தது; ரிஷி புறப்பட்டார். கேட்ட அரசனுக்கு குறுகுறுப்பு அடங்கவில்லை – யார் அந்த துர்யோதநனும்-இராவணனும்? மாடு-விரட்டு / வநம் அழிவு இவைகள் என்ன நிகழ்ச்சிகள்? அதிலும் குறிப்பாக, யுத்தம் எதற்கு? (அரசனாயிற்றே, யுத்தத்தில் ஆர்வம் இருக்காதா!) எழுந்த குறுகுறுப்பு, ரிஷியிடம் கேள்வியாக முடிந்தது. இவ்வளவு போதாதா முநிவர்க்கு; முழுக் கதையும் சொல்லிமுடித்தார்.

இதுபோல் உள்ளதல்லவா இத்தலைப்பு! உங்கள் கேள்விகளுக்கு உத்தரம் இப்போது அளிக்கப்படுகிறது, சிந்தாமல் கொள்மினீர் தேர்ந்து!!

இத்தலைப்பின் சொற்றொடர், ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த பரமதபங்கம் எனும் தமிழ் ப்ரபந்தத்திலிருந்து (பாசுரம் 41) கையாளப்படுகிறது. அங்கு



ஸந்தர்ப்பம், பாசுபத மத கண்டநம். இதன் பொருள்: ஓதாதே= தான் எந்த ஆசிரியரிடமும் அத்யயநம் செய்யாதவனாய், ஓதுவிக்கும் = ப்ரஹ்மாதிகளுக்கு அத்யயநம் செய்விக்கும், ஒருவன் = இணையில்லாத எம்பெருமான், என்பது. ''அகில லோகாநாம் குரு: நாராயண:'' (அ)குரு: (நாராயணன், தனக்கொரு ஆசார்யனில்லாத பரமாசார்யன்) என்றல்லவா சொல்கிறது ஸ்ரீவிஷ்ணுபுராணம்!


நமக்கு ப்ரகரணமோ, புரட்டாசி மாத ஸஞ்சிகைக்குப் பொருத்தமான ஒரு விஷயத்தை வாசகர்களோடு பகிர்ந்துகொள்ளும் முயற்சி - அதுதான் பன்னிரு சீரடியில் அமைந்த ஸ்வாமிதேசிகன் விஷயமான ''வாதாசநவரர்'' எனத்தொடங்கும் நாள்பாட்டாம். ஸேவிப்போமா!!

*வாதாசநவரர் இவரென வரு மாபாஷ்யம் வகைபெறு நாள்*
*வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்திடு நாள்*
*பேதாபேதம் பிரமம் எனாவகை பிரமம் தெளிவித்திடு நாள்*
*பேச்சொன்றுக்கு சததூஷணியை பேசிய தேசிக நாள்*
*தீதாகிய பல மாயக் கிளைகளை சிக்கென வென்றிடு நாள்*
*திக்கெட்டும் புகழ் ஸ்ரீபாஷ்யத்தைத் தெளிய உரைத்திடு நாள்*
***ஓதாதோதும் வேதாந்தாரியன்** உதயம் செய்திடு நாள்*
*உத்தமமான புரட்டாசித் திருவோணம் எனும் நாளே!*

இந்தப் பாசுரத்தின் 7–வது அடியிலுள்ள 'ஓதாதோதும் வேதாந்தாரியன்', எனும் சொற்றொடரை ஒட்டிய தலைப்பு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு கேள்வி: 'வேதவெற்பு எனக்கருதப்படுவதால் வேங்கடவனை வேதாந்தாரியன் என்னலாம்; அது போல 'வேதாந்தாசார்யர்' என்பது ஸ்வாமி தேசிகனுக்கு பெரிய பெருமாள் அளித்த விருதாகும். இப்படி வேதாந்தாரியன் எனும் பெயர், எம்பெருமான்-தேசிகன் இருவரையும் குறித்தபோதிலும், 'ஓதாதோதும்' என்ற அடைமொழி தேசிகனுக்கு எப்படிப் பொருந்தும்?' என. பொருத்தம் பொருந்தலும் சொல்கிறோம் ...

ஓதாதோதும் என்பதை, 'ஓதாது + ஓதும்' எனப் பிரித்தால், 'தான் ஆசார்யரிடம் ஓதாமல், வேதத்தைச் சொல்பவர்' எனவாகி தேசிகனுக்கு பொருந்தாது போகும். அப்படியின்றி, 'ஓதாது (இதுவரை பூர்வர்களால் கையாளப்படாதது) + ஓதும் (அர்த்த விசேஷங்களைச் சொல்லும்)' எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாமே. இதை புதிது எனத் தள்ளவேண்டாம் – 'நவீநம் ததபி கிம்' என நெஞ்சு நிமிர்த்தி, வைதிக மார்க்கத்திலேயே செல்பவர், எனவாகிறது.

இப்படி, இச்சொற்றொடர் இருவரையும் குறிக்கும் என்பது, மேலே சொல்லியிருக்கும் 'உதயம் செய்திடு நாள்' என்பதாலும் உறுதியாகிறது – 'அன்று இவ்வுலகினையாக்கி அரும்பொருள்நூல் விரித்து நின்று தன்னீள்புகழ் வேங்கட மாமலை மேவி பின்னும் வென்றிப் புகழ் திருவேங்கடநாதன் என்னும் குருவாய் நின்று நிகழ்ந்து மண்மேல் நின்ற நோய்கள் தவிர்த்தனனே' என்ற வரதகுருவின்



## தேசிக மொழி

**பேரருளாளன் திருவடிகளில் பரந்யாஸத்தை செய்து மோக்ஷத்தை எதிர்பார்க்கும் நாம் இனிப்பலனைக் கருதி ஒன்றையும் செய்யவேண்டாவாயினும், இங்கு இருக்கும்நாள் நற்பொழுது போக்கி மனமகிழப் பேரருளாளனின் பெருமையை பேசுகின்றோம்.**

– மெய்விரத மான்மியம்

வாக்கியப்படி, இருவரும் தோன்றியது புரட்டாசித் திங்கள் திருவோணத் தாரையில்!

இனித் திருநாள்பாட்டின் மற்ற அடிகளின் பொருளை சிறிது அநுபவிப்போம்:

- வாதாசநவரர் இவரென வரு மாபாஷ்யம் வகைபெறு நாள் = ப்ரஹ்ம ஸூத்ரத்தின் 'தர்க்க பாதத்தில்' பிறமதத்தினரின் வாதங்களை விழுங்கி வென்றவர் என்பதால், ஸ்ரீபாஷ்யகாரர் 'வாத + அசநர்' ஆகிறார்; அதை அதிகரணஸாராவளி முதலிய க்ரந்தங்கள் மூலமாக வகைபடுத்தியவர் என ஸ்வாமி தேசிகனைப் போற்றுகிறது.
- வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்திடு நாள் = ஸ்வாமி நம்மாழ்வாரின் திருவாய்மொழி, தெளியாத மறைநிலங்களைத் தெளிவிப்பதாயும்; அதன் ஆயிரம் பாசுரங்களும், ஒவ்வொரு பகவத்-குணங்களைப் பறை சாற்றுவதாயும் அமைகின்றன எனவும் அதன் வாசியை அறிந்து அறிவித்தவர் என தேசிகனைப் புகழ்கிறது.
- பேதாபேதம்பிரமம்எனாவகைபிரமம்தெளிவித்திடு நாள் = 'ப்ரஹ்மம் என்ற ஒரே வஸ்துதான் ப்ரமத்தால் ஒன்றெனவும் பலவெனவும் தோற்றுகின்றது' என வாதிடும் பாஸ்கர-யாதவப்ரகாச மதத்தினரின் ப்ரமத்தை அழித்தவர் என ப்ரசம்ஸிக்கிறது.
- பேச்சொன்றுக்கு சததூஷணியை பேசிய தேசிக நாள் = கீழே குறிப்பிட்ட வாதிகளின் 'அத்வைத'ப் பேச்சுக்கு நூறு தோஷங்கள் கண்டெடுத்தவர் என ஸ்வாமியைக் கொண்டாடுகிறது.
- தீதாகிய பல மாயக் கிளைகளை சிக்கென வென்றிடு நாள் = ஆத்மாவுக்கு பொய்யான பொருளைக்கூறி



தீங்கு விளைவிக்கும் மாயாவாதம்-சூன்யவாதம் போன்ற கிளைகளை எளிதில் களைந்தவர் என்கிறது.

❖ திக்கெட்டும்புகழ் ஸ்ரீபாஷ்யத்தைத் தெளிய உரைத்திடு நாள் = பாரதமெங்கும் சென்று ப்ரஹ்ம ஸூத்ரத்தின் உரையான ஸ்ரீபாஷ்யத்தின் துணைகொண்டு வாதிகளை வென்றவர் என விமர்சிக்கிறது. இதனால் ஸ்வாமியின் அவதார உத்தேச்யமும் சொல்லப்பட்டதாகிறது.

❖ உத்தமமான புரட்டாசித் திருவோணம் எனும் நாளே = இவ்வடி ஸ்வாமியின் அவதார தினத்தை துதிக்கிறது. மேலும், எம்பெருமான் தோன்றியதால் ‘உத்தர’மாக ஆன இத்திருவோணம், ஸ்வாமி அவதரித்ததால் ‘உத்தம’மாக விளங்குவதைச் சொல்லாலேயே குறிப்பிடுகிறது.

*வாழியணி தூப்புல் வரு நிகமாந்தாசிரியன்*
*வாழியவன் பாதாரவிந்த மலர் - வாழியவன்*
*கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்*
*தீதிலா நல்லோர் திரள்.*

---

# புரட்டாசியில் முக்கிய உத்ஸவங்கள்

**நவராத்ரி உத்ஸவம்** (9 நாட்கள்)
ஸெப்டம்பர் 29 (ஞாயிறு) முதல்
அக்டோபர் 7 (திங்கள்) வரை

**மஹாநவமி:**
அக்டோபர் 7 (திங்கள்)

**விஜயதசமி:**
அக்டோபர் 8 (செவ்வாய்)

**ஸ்வாமி தேசிகன் வார்ஷிக உத்ஸவம்** (10 நாட்கள்)
ஸெப்டம்பர் 29 (ஞாயிறு) முதல்
அக்டோபர் 8 (செவ்வாய்) வரை

**பெருமாள் தங்க கருட வாஹனம்:**
அக்டோபர் 1 (செவ்வாய்)

**ஹயக்ரீவ ஆராதனம்:** அக்டோபர் 5 (சனி)

**யானை வாஹனம்:** அக்டோபர் 6 (ஞாயிறு)

**திருத்தேர்:** அக்டோபர் 7 (திங்கள்)

**தேசிகன் சாற்றுமுறை:** அக்டோபர் 8 (செவ்வாய்)

**திருப்பவித்ர உத்ஸவம்** (7 நாட்கள்) : அக்டோபர் 13 (ஞாயிறு) முதல் 19 (சனி) வரை

ஸ்ரீ:

# தயாசதகத்தில் தசாவதாரம்

ஸ்ரீ உ.வே. ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**எம்பெருமானின் கருணையின் பெருமை**

பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணன் அனைத்து மங்களகரமான குணங்களுக்கும் இருப்பிடமானவன் என்று ஸகல வேதங்களும் ஒரே குரலாக ஓதுகின்றன. இவற்றில் ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் எனும் ஆறும் எம்பெருமானின் மேன்மையைப் பறைசாற்றுவனவாகும். இந்த குணங்கள், தன்னை அண்டியவர்களைக் காப்பாற்றுவதற்கும், தன்னுடைய அடியவர்களின் எதிரிகளை தண்டிப்பதற்கும் ஈச்வரனுக்கு உபயோகப்படுபவை.

இவை தவிர ஸௌசீல்யம், வாத்ஸல்யம், மார்தவம், ஆர்ஜவம், ஸௌஹார்தம், ஸாம்யம், காருண்யம், மாதுர்யம், காம்பீர்யம், ஔதார்யம், சாதுர்யம், ஸ்தைர்யம் போன்ற குணங்கள் பக்தர்களை காப்பாற்றுவதற்குக் காரணமாயிருப்பன.

அந்த திருமகள்கேள்வன் இந்த தயை எனும் கருணையைக் கொண்டு தன்னை அண்டியவர்கள் ஏதேனும் துயர மடைந்தால், அவற்றைத் தன்மேல் ஏறிட்டுக்கொண்டு, அந்த அடியவர் களின் துயரங்களைப் போக்கி இஹ, பர ஸுகங்களை அளிக்கின்றான்.

ஆழ்வார்களும் ''நின்னருளே புரிந்திருந்தேன்'' என்றும், ''துணி யேன் இனி நின்னருளல்லதெனக்கு'' என்றும், ''நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே'' என்றும் ''ஆவா! என்று அருள்செய்து அடியேனொடும் ஆனானே'' என்றும் அவனுடைய அருளையே வேண்டி நின்றனர். ஆளவந்தாரும் ''அகதிம் சரணாகதம் ஹரே! க்ருபயா கேவலம் ஆத்மஸாத் குரு!'' என்று வேறு புகலின்றி ''உன்னுடைய கருணை யினாலேயே என்னை கடைத்தேற்ற வேண்டும்'' என்று இயம்புகிறார்.

**தயாசதகத்தின் மேன்மை**

வேங்கடமாமலையில் மேவு கின்ற கலியுக தெய்வமாம் ஸ்ரீநிவாஸனின் மறு அவதாரமும் அந்த திருமலைமாலின் திருமணியாக அவதரித்தவருமான ஸ்வாமி ஸ்ரீதேசிகன் எண்ணற்ற நூற்களை இயற்றி நம்மாழ்வாரின் துணையடிக்கீழ் வாழ்வை உகந்தும், ஸ்ரீபாஷ்யகாரரின் வள்ளல் தன்மையைப் போற்றியுமே தம் வாழ்நாள் முழுதும் அர்ப்பணித்த உத்தம் புருஷர்.

அந்த ஆசார்ய ரத்னம் இருபத்து எட்டு ஸ்தோத்ரங்களை திருமகள் கேள்வனின் விஷயமாக இயற்றி நம்போல்வார்கள் நித்யபாரயணம் பண்ணி அவனைப் பெறுவதற்காக அநுக்ரஹித்தருளினார்.

இவற்றுள் 108 ச்லோகங்களாலான 'தயாசதகம்' என்பது மிகவும் போற்றத்தக்கதாகும். இதில் திருமலையப்பனின் கருணையையே உருவகப் படுத்தி, ''கருணே கிங்கரதாம் தவோபயாதி'' என்று ''மற்றைய குணங்கள் இந்த தயாகுணத்திற்கு அடிமை செய்கின்றன என்றும், அவன் திருவடியைப் பற்றினவர்களின் பால் அவன் செய்யும் சேமங்கள் அனைத்துக்கும் இந்த தயையே காரணம் என்றும் அறுதியிடுகிறார் ஸ்வாமி.



மேலும், வேங்கடவனின் கருணையை ஒரு பிராட்டியாக உள்ளத்துக்கொண்டு அவளோடு பேசுவதாக பாவித்து பல சாஸ்த்ரங்களின் அர்த்தங்களை, குறிப்பாக சரணாகதியின் பெருமையை, பலவிடங்களில் பரக்கப் பேசுகிறார். இதில் வடமொழி இலக்கணத்தில் பல விருத்தங்களைக் கையாண்டு, ஆசார்யர் தம்முடைய கவிதாசாதுர்யத்தைக் காண்பித்து, இதைப் பாராயணம் செய்பவர்களை ஆனந்தக் கடலுக்கு அழைத்துச் செல்கிறார்.

**தயாசதகத்தில் தசாவதார வர்ணனை**

எம்பெருமான் பரரூபியான வைகுண்ட வாஸுதேவ னாகவும், திருப்பாற்கடல் நாதனாகவும், மத்ஸ்ய, கூர்ம, வாமன, ஹயவதனமான விபவ அவதாரங் களாகவும், ஸர்வ ஜீவராசிகளிடத்திலும் அந்தர்யாமி யாகவும், திருவேங்கடம் போன்று அர்ச்சிக்கத் தகுந்த திவ்ய மங்கள விக்ரஹமாகவும் ஐந்து நிலையிடங்களில் விளங்குகின்றான் என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

விபவாதாரங்களான மத்ஸ்யம் போன்றவை முப்பத்து சில்லரை என்று ஆசார்யர் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் வெளிப்படுத்துகிறார். இதில் மத்ஸ்யம் முதல் க்ருஷ்ணாவதாரம் வரை நடந்து முடிந்த ஒன்பது மற்றும் நிகழப்போகும் கல்கி ஆகிய தசாவதாரங்களைப் பாரோர் மிகவும் போற்றுவர்.

இந்த பத்து அவதாரங்களையும் தம்முடைய இச்சையினாலேயே எம்பெருமான் எடுக்கின்றான் என்றும் நம்மைப்போன்று அவன் கர்மத்தினால் பிறக்கவில்லை என்றும் ஸ்ரீபகவத் கீதையில் பகவான் தானே வெளியிடுகிறான்.

இந்த தயாசதகத்தில் 82-ம் ச்லோகத்திலிருந்து 90 வரை ஸ்வாமி தேசிகன் அர்ச்சாரூபியான திருவேங்கட முடையானே இந்ததசாவதாரங்களையும் எடுத்தவன் என்றும், அவனுடைய அவதாரத்திற்க்கு காரணம் தயாதேவியே என்றும் சுவைபட அநுபவிக்கிறார்.

**மத்ஸ்ய, கூர்ம, வராஹ மூர்த்திகளின் வர்ணனை**

''தயாதேவியே! இந்த உலகைப் படைத்து உன் பார்வை மற்றும் சிந்தனை முதலியவற்றால் வளர்க்க நினைத்து நீ திருவேங்கடவனின் திருமேனியில் அநுப்ரவேசித்து எந்த தோஷங்கள் இல்லாததும் பல குணங்களுக்கு இருப்பிடமாகவும் உள்ள மத்ஸ்ய மற்றும் கூர்ம அவதாரங்களாக அவதரிக்க வைத்தாய'' என்று அருள்கிறார். மத்ஸ்யாவதாரத்தில் தயையின் இருப்பிடம் திருக்கண்களாகவும், கூர்மாவதாரத்தில் அவனுடைய சிந்தனையில் கருணையிருந்ததாகவும் பெரியோர்கள் உரைப்பர்.

ஸர்வலோகத்தையும் நியமிக்கும் திருமலையப்பன் ப்ரளய காலத்தில் யோகநித்ரையில் எழுந்தருளி யிருந்தான். பின்பு அவன் நித்ரை கலைந்து விழிக்கும்



பொருட்டு நான்கு ஸமுத்ரங்களும் பொங்குவதால் ப்ரளயத்தின் ஹிம்ஸையை அடைந்த பூமியை வராஹரூபத்தைத் தரித்து தன்னுடைய கோரைப் பல்லினால் நன்றாக மேலே தூக்கிவிட்டான். இங்கு எம்பெருமான் நித்ரை கலைப்பதற்கும் அவன் வராஹரூபத்தை அடைவதற்கும் தயாதேவியே காரணம் என்கிறார் வேதாந்தகுரு. கோலவராஹனின் கோரைப்பல்லில் ஸ்ரீதயாதேவி குடிகொண்டிருந்தாள் என்பது பெரியோர்களின் நிர்வாஹம்.

**நரஸிம்ஹ, வாமன, பரசுராமர் மங்களாசாஸநம்**

வ்ருஷகிரீசனான ஸ்ரீநிவாஸன், சேராச்சேர்த்தியான ஸ்ரீந்ருஸிம்ஹாவதார ஸமயத்தில் அவனுடைய திருமுகம்-பிடரிகள் புடைக்க, கோபம் பொங்க, அட்டஹாஸமாக ஹிரண்யனை வதம் செய்தான். ஆனால் அதே ஸமயத்தில் தன்னுடைய பக்தன் ப்ரஹ்லாதனை கடாக்ஷிக்கும் ஸமயத்தில் கமலப்பூ போன்ற அழகிய கண்களினால் கருணையைப் பொழிந் தான். அவன் கோபம்கொள்ளும் ஸமயத்திலேயே பக்தப்ரஹ்லாதன்மேல் கருணையைப் பொழிவதற்கு அந்த தயாதேவியே காரணம் என்று ஸ்வாமி இனிதாக உரைக்கிறார்.

பின்பு வாமனாவதாரமெடுத்து, மூன்றடி அளப்பதற்காக த்ரிவிக்ரமனாக நிமிர்ந்தபோது ப்ரஹ்மா தன்னுடைய கமண்டலத்தில் இருந்த

நீரால் அந்த பரமபுருஷனுடைய திருவடியைக் கழுவ, அது பரம பாவன மான கங்கையாக அவதரித்து இந்த பூமண்டலத்தைப் புனிதமாக்கியது. மேலும் அவன் மூவுலகங்களையும் அளக்கும் வேளையில் இன்னார் இனையார் என்று பேதம் கொள்ளாமல் அனைவரது தலைகளிலும் வேதங் களுக்கெல்லாம் மேல்சாற்றாயுள்ள தனது திருவடியால் தீண்டினான். அவன் அவ்வாறு தீண்டுவதற்கு தயாதேவியே காரணம் என்று போற்றுகிறார்.



பின்பு திருமலையப்பன் பரசுராமனாக, கோக்குல மன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால் போக்கியது தன் கருணையினாலேயே என்கிறார். இது எவ்வாறு என்றால் ஒரு யாகத்தில் இடப்படும் பசுவானது ஸ்வர்கத்தை அடைவதுபோல் ‘கடினமான க்ஷத்ரிய ராஜாக்களை நலிந்துதான் நாம் காப்பாற்ற வேண்டும்’ என்று தனது கருணையினாலே அவர்களை வதம் செய்து அவர்களுக்கு நல்ல கதியை அடைவித்தான்.

**ஸ்ரீராம, பலராமர்களின் அவதாரங்களில் கருணையின் பங்கு**

அடுத்ததான ஸ்ரீராமாவதாரத்தில் தன் பத்னியான ஸீதா பிராட்டியுடன் தன் திருவடியை அடைந்தவர்களுக்கு அனைத்துப் பலன்களையும் அளித்தான். அகில குணேச்வரியான தயாதேவி இந்த அவதாரத்தில் பூர்ண அதிகாரத்தைச் செலுத்தி, தேவர்கள் முதல் அறிவில்லாத ஜந்துக்கள் வரை அனைவர்க்கும் அந்த சக்கரவர்த்தி திருமகனின் கருணையைப் பொழிய வைத்தாள். குறிப்பாக, இலங்கையின் ஈடழிய கடலைப் பிளந்து கட்டிய ஸேதுவை, தன்னுடைய அவதார ஸமாப்திக்குப் பிறகும் தர்சிப்பவர்களின் பாவங்களை ஸமுத்ரம் பிளந்தாற்போலே பிளந்து அவர்களை கரையேற்றுகிறாள் அந்த திருமலையப்பனின் தயாதேவி என்று மங்களாசாஸநம் செய்கிறார்.

‘‘கேசவ க்ருபையே! அந்த திருவேங்கடமுடையான் உனக்கு தாஸவ்ருத்தி செய்பவன். அவனது அனைத்து விளையாட்டுக்களும் இந்த உலகத்திற்கு நன்மையையே பேணும்படி நீ செய்விக்கிறாய். அவன் நம்பிமூத்தபிரானாக அவதாரம் செய்யும் ஸமயத்தில் அவன் மத்யபானம் பண்ணி அவனை ஆச்ரயித்தவர்களின் பால் கருணை பொழிய வைக்கிறாய். அதே ஸமயத்தில் அந்த பலராமனின் தேஹபலத்தால் அரக்கர்களான பிலம்பன் போன்றவர் களை இந்த உலகத்தைக் காப்பாற்றும் பொருட்டு அழிக்க வைத்தாய். என்னே உன் கருணை!’’ என்று ஸ்ரீதேசிகன் அதிசயிக்கிறார்.

**க்ருஷ்ண, கல்கி அவதாரங்களின் மேன்மை**

மண்மிசைப் பெரும்பாரம் நீங்க ஓர் பாரதமாபெரும்போர்பண்ணி மாயங்கள் செய்து சேனையை பாழ்பட நூற்றுக் கணக்கான அரச வேஷத்திலுள்ள அசுரர்களை மாய்ப்பதான காரணத்தை வைத்துக்கொண்டு திருவேங்கடத் திருமாலை தாமோதரனாக அவதரிக்கச் செய்தாள் தயாதேவி. அதனால் ஜகத் தில் வேதமாகிற மாடியில் அமைக்க பட்ட தீபம் போலே, புலவர்கள் எல்லாம் போற்றும் கீதை எனும் மஹா சாஸ்த்ரமான விளக்கினாலே உலகில் உள்ள இருளைத் தொலைத்தாள் தயாதேவி என்று புகழ்கிறார் கீதை மொழிந்திடும் வேதாந்த தேசி கனார்.

இனி உண்டாகப் போவதான அவதரமான கல்கி அவதாரத்தில் திருமலையப்பன் ஒரு குதிரையின் மீதேறி கூரிய கைகத்தியால் பூமியிலுள்ள துஷ்டர்களை பாக்கியில்லாமல் ஒழிப்பான். அதே கத்தியை தயாதேவியின் லீலையினால் கருத்த மழைமேகமாக மாற்றி க்ருதயுகம் என்னும் நல்ல பயிரினை உண்டுபண்ணுவான். புதுயுகத்தை ஆரம்பிக்க வேண்டி பழைய யுகத்தை அகற்றுவது தயையின் கார்யமே என்று கூறுகிறார் ஸ்வாமி தேசிகன்.

**முடிவுரை**

இவ்வளவு பெருமைகள் வாய்ந்த இந்த தயாசதகத்தை இயற்றிவன் அந்த திருவேங்கடவனே என்றும், இதை எழுதுவதற்குத் தன்னை ஒரு கருவியாக அவனே பயன்படுத்திக்கொண்டான் என்றும் அவையடக்கத்துடன் இந்த தயாசதகத்தை முடிக்கிறார் ஸ்வாமி ஸ்ரீதேசிகன்.

நாமும் இந்த தயாசதகத்தை தினமும் பாராயணம் செய்து அந்த திருமலையப்பனே பேயாழ்வாரின் அவதார ஸ்தலமான திருமயிலையில் நித்யம் ஸாந்நித்யம் பெற்று விளங்குவதால, அவனை புரட்டாசி சனிக்கிழமைதோறும் ஸேவித்து இந்த புரட்டாசி திருவோண நன்னாளாம் ஸ்வாமி தேசிகனின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்திலும் யதா சக்தி கலந்து கொண்டு, பெருமாள், பிராட்டி, ஆழ்வார், எம்பெருமானார், ஆசார்யர்களின் அநுக்ரஹத்திற்குப் பாத்ரர்களாகும்படி வேண்டி அமைகிறேன்.





ஆடி கருடன் - கஜேந்த்ர மோக்ஷம் புறப்பாடு











ஶ்ரீ:





ஶ்ரீஜயந்தீ உறியடி உத்ஸவம் - பெருமாள், கண்ணன் புறப்பாடு





அத்யயந ஹோமம் - யஜுர் உபாகர்ம





அத்யயந ஹோமம் - ஸாம உபாகர்ம











ஸ்ரீஹயக்ரீவ ஜயந்தீ - ஆவணி-ச்ரவண உத்ஸவம்









ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருமயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவ பத்திரிகை

ஏற்றி மனத்தொழில் ஞானவிளக்கை யிருளனைத்தும்
மாற்றினவர்க்கோர் கைம்மாறு மாயனும் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதம் பொங்குபுகழ்
சாற்றி வளர்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே — ஸ்வாமி தேசிகன்

மாமயிலைப்பதியதனில் ஸ்ரீமத் வேதாந்ததேசிகன் ஸந்நிதியில் நாளது விகாரி வருஷம் புரட்டாசி மாதம் 12ம் தேதி 29.09.2019 ஞாயிற்றுக்கிழமை முதல் நடைபெறும் ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் வார்ஷிக மஹோத்ஸவத்திற்கு ஸகல ஆஸ்திகர்களும் எழுந்தருளி மேற்படி உத்ஸவத்தை சிறப்பித்து. ஆசார்ய ப்ரஸாதம் பெற்று ஆனந்தித்து அடியோங்களையும் தன்யராக்கும்படி ப்ரார்த்திக்கின்றோம். புரட்டாசி 21ம் தேதி 08.10.2019 செவ்வாய்கிழமை ஸ்ரீவேதாந்த தேசிகன் சாற்றுமுறை நடைபெறும்.

R.முகுந்தன், P.சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன் – தர்மகர்த்தாக்கள்

| | | | |
|---|---|---|---|
| ***11.09.2019*** | புதன்கிழமை | மாலை | **கடை ஸ்ரவணம்** |
| ***01.10.2019*** | செவ்வாய்கிழமை | காலை | **தங்க கருட வாஹனம்** |
| ***07.10.2019*** | திங்கட்கிழமை | காலை | **திருத்தேர்** |
| ***08.10.2019*** | செவ்வாய்கிழமை | இரவு | **சாற்றுமுறை** |

## உத்ஸவ விபரம்/ நிகழ்ச்சி நிரல்

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 28.09.19 (சனி) | ஸ்வாமி தேசிகன் கண்ணாடியறைக்கு எழுந்தருளல் | இரவு 8:00 | ஸ்ரீ. C.R. ராகவன் குடும்பத்தினர் |
| 29.09.19 (ஞாயிறு) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீ. T.C. ரங்கராஜன், 2. ஸ்ரீ ஆனந்த் ரங்கநாதன், 3. ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் |
| | யாளி வாஹனம் | இரவு 8:00 | Electoral Board |
| 30.09.19 (திங்கள்) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ K. ராஜகோபால் |
| | சூர்யப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீமதி எச்சம்மாள் பண்டு 2. ஸ்ரீ V. ராஜகோபால் |
| 01.10.19 (செவ்வாய்) | ஸ்ரீ பெருமாள் தங்க கருடன், ஸ்ரீ தேசிகன் தங்க கேடயம் | காலை 6:30 | 1. ஸ்ரீமதி பத்மா சாரங்கன் குடும்பத்தினர், 2. ஸ்ரீ P. ஸ்ரீநிவாஸராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீ. ராமரத்னம் ஐயங்கார் |
| | சிம்ஹ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ S.R.R. ஆசார்யா குடும்பத்தினர், 2. ஸ்ரீ T.P. பத்மநாபன் |
| 02.10.19 (புதன்) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீ.R. வெங்கடேஷ், 2. ஸ்ரீமதி ஸ்ரீநிவாஸன் |
| | சந்திரப்ரபை | இரவு 8:00 | 1. ஸ்ரீ T.T. ரகுராம், 2. ஸ்ரீ குஞ்சிதபாதம் |
| 03.10.19 (வியாழன்) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீ V.A. ரகு குடும்பத்தினர், 2. ஸ்ரீ S.T. ராகவன் குடும்பத்தினர் 3. ஸ்ரீமதி கனகம்மாள் பண்டு |
| | ஹம்ஸ வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி, 2. ஸ்ரீ A. நரஸிம்மன் |
| 04.10.19 (வெள்ளி) | சூர்ணபிஷேகம், பல்லக்கு | காலை 6:00 காலை 6:30 | 1. ஸ்ரீ V.P. ப்ரேம் குமார் 2. ஸ்ரீமதி P.R. விஜயலக்ஷ்மி பண்டு |
| | குதிரை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. கஸ்தூரிரங்கன் 2. ஸ்ரீமதி ரமாமணி ராஜகோபாலன் |

| நாள் | உற்சவம் | நேரம் | உபயதாரர் |
|---|---|---|---|
| 05.10.19 (சனி) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீ V.R. ராஜகோபால், 2. ஸ்ரீ V. கண்ணன் |
| | ஸ்ரீ ஹயக்ரீவ ஆராதனம் | மதியம் 3:00 | ஸ்ரீ ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பரகாலமடம், மைசூர் |
| | மேனா பல்லக்கு **(அக்ஷராப்யாச திருக்கோலம்)** | இரவு 8:00 | 1. ஸ்ரீ N. நாராயணன் ராம்ஜி, 2. ஸ்ரீ சஞ்ஜீவ் செல்லப்பா, 3. ஸ்ரீ P.R. ராமானுஜம் |
| 06.10.19 (ஞாயிறு) | பல்லக்கு | காலை 6:30 | 1. ஸ்ரீ மாடபூசி சுதர்ஸனம் ஐயங்கார் பண்டு 2. ஸ்ரீ S.S. ராகவன் |
| | யானை வாஹனம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ G. வாசுதேவன், 2. ஸ்ரீ T.V. ராமானுஜம் |
| 07.10.19 (திங்கள்) | திருத்தேர் திருத்தேருக்கு எழுந்தருளல் | | *காலை 5.00 - 6.00 மணி (கன்யா லக்னம்)* |
| | திருத்தேர் புறப்பாடு | காலை 7:00 | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ கைங்கர்ய ஸபா |
| | தங்க கேடயம் | இரவு 8:00 | 1. ஸ்ரீ N.S. கண்ணன், 2. ஸ்ரீ C. கிருஷ்ணன் |
| 08.10.19 (செவ்வாய்) | ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை மூலவர் திருமஞ்ஜனம் | | தேவஸ்தானம் |
| | மங்களாசாஸனம் | காலை 5:00 | 1. ஸ்ரீ S. வரததேசிகன் & ஸ்ரீ V. வெங்கடேஷ் |
| | ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ தேசிகன் பலாத்தோப்பு எழுந்தருளல் | காலை 8:00 | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| | திருமஞ்ஜனம் | | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | பத்தி உலாத்தல் | மாலை 6:00 | |
| | ஒய்யாளி, திருப்பாவை சாற்றுமுறை, மங்களகிரி புறப்பாடு, திருவாய்மொழி சாற்றுமுறை | இரவு | |
| 09.10.19 (புதன்) | கந்தப்பொடி வஸந்தம் | காலை 7:00 | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோஸியேஷன் (பதிவு) |
| | விடையாற்றி உத்ஸவம் முதல் நாள் – திருமஞ்ஜனம் | காலை 10:00 | ஸ்ரீமதி சுபத்ரா பாலாஜி குடும்பத்தினர் |
| 10.10.19 (வியாழன்) | விடையாற்றி உத்ஸவம் இரண்டாம் நாள் – திருமஞ்ஜனம் | மாலை 4:30 | ஸ்ரீ S. சுந்தரம் |
| 11.10.19 (வெள்ளி) | விடையாற்றி உத்ஸவம் மூன்றாம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 9:30 | ஸ்ரீ P. கோபால்ஸ்வாமி ஐயங்கார் பண்டு |
| 03.11.19 (ஞாயிறு) | விடையாற்றி உத்ஸவம் 27ம் நாள் – திருமஞ்ஜனம் | காலை 10:00 | ஸ்ரீ S.K. ஸ்ரீநிவாஸன், |
| | புஷ்ப பல்லக்கு | இரவு 7:30 | ஸ்ரீ. உ.வே. பி.வி.ராகவன் (பண்டு) ஸ்ரீ. மதுதேசிகன் குடும்பத்தினர் |

**(பிரதி தினம் காலை 9:00 மணிக்கு திருமஞ்ஜனம், மாலை 6:00 மணிக்கு பத்தி உலாத்தல்நடைபெறும்)**

**Note:** 1. CONTRIBUTIONS, IF ANY, CAN BE MADE BY WAY OF CASH OR CHEQUE (in favour of Sri Vedantha Desikar Devasthanam)

2. Those who have not updated their contact details like mobile number, E-mail ID are requested to update the same, in order to ensure frequent and speedier communication.

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவ பத்திரிகை

## பசலி 1429 ~ விகாரி வருஷம் ~ 2019

## 13.10.2019 முதல் 19.10.2019 வரை

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது விகாரி வருஷம் புரட்டாசி மாதம் 26ம் தேதி (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக் கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயிக்கவும், ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் கைங்கர்யபரர்களாயிருந்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திப்பதோடு, இவ்வருடம் இன்னும் ப்ரபல்யமாய் இப்பரம பாவனமான உத்ஸவத்தை நடத்தி வைக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 11.10.2019 – வெள்ளிக்கிழமை மாலை
அதிவாஸம் – 12.10.2019 – சனிக்கிழமை மாலை
தினசரி ஹோமம் – காலை 8:00 மணி மற்றும் இரவு 8:30 மணி
**மஹாபூர்ணாஹூதி – 19.10.2019 – சனிக்கிழமை**
பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு

R.*முகுந்தன்*, P.*சேஷாத்ரி*, N. *கஸ்தூரிரங்கன்*
*தர்மகர்த்தாக்கள்*

| நாள் | காலை உத்ஸவ உபயம் | காலை ததீயாராதனை உபயம் | மாலை உத்ஸவ உபயம் | மாலை ததீயாராதனை உபயம் |
|---|---|---|---|---|
| 11.10.19 (வெள்ளி) | அங்குரார்ப்பணம் (மாலை)<br>ஸ்ரீ சேனைநாதன் புறப்பாடு | — | ஸ்ரீ. K.L.ராமதுரை | — |
| 12.10.19 (சனி) | அதிவாஸம் (மாலை) | — | அத்திகிரி அருளாளன் | — |
| 13.10.19 (ஞாயிறு) | ஸ்ரீமதி K.R. சித்ரா கிருஷ்ணஸ்வாமி | 1. ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன்<br>2. ஸ்ரீ S. ரவிச்சந்திரன் | ஸ்ரீ N.S. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ K. ராஜகோபாலன்<br>2. ஸ்ரீ N.சேஷாத்ரி |
| 14.10.19 (திங்கள்) | 1. ஸ்ரீமதி ஜானகியம்மாள் பண்டு<br>2. ஸ்ரீ S.பத்மநாபன் | ஸ்ரீ K.R. ராமஸ்வாமி<br>ஸ்ரீ R. பார்த்தஸாரதி | 1. ஸ்ரீ P.V. ராகவன் (பண்டு)<br>2. ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ N.S. வரதாச்சாரி<br>2. ஸ்ரீ. நந்தகுமார் |
| 15.10.19 (செவ்வாய்) | ஸ்ரீமதி பத்மா ராமானுஜம் | ஸ்ரீ S.V.S. ராகவன்<br>ஸ்ரீ. R. ராமக்ருஷ்ணன் | ஸ்ரீ A.N.S. சுந்தரம் | 1. ஸ்ரீ A.N.S. சுந்தரம்<br>2. ஸ்ரீ L.V. நரஸிம்மன் |
| 16.10.19 (புதன்) | ஸ்ரீ T.V. நரஸிம்மன் | 1. ஸ்ரீ D. சுந்தரராஜன்,<br>2. ஸ்ரீமதி D.சுஜாதா | ஸ்ரீ Dr. E. ஸ்ரீனிவாசன் | 1. ஸ்ரீ T.M. ரவி நரஸிம்மன்<br>2. ஸ்ரீ M.P. ராஜா |
| 17.10.19 (வியாழன்) | ஸ்ரீ S. அருண் | ஸ்ரீ M.D. சுதர்ஸனம் ஐயங்கார் (பண்டு)<br>ஸ்ரீமதி ப்ரேமா பார்த்தஸாரதி | ஸ்ரீ N.K. ரங்கஸ்வாமி ஐயங்கார் குடும்பம் | 1. ஸ்ரீ R. சம்பத்,<br>2. ஒலக்கூர் ஸ்ரீ R. ராஜகோபாலன் |
| 18.10.19 (வெள்ளி) | ஸ்ரீ S. சத்யநாராயணன் &<br>ஸ்ரீ N.கேசவன் | ஸ்ரீ V.J. பார்த்தஸாரதி<br>ஸ்ரீ பத்மாவதி கைங்கர்ய ஸபா<br>ஸ்ரீமதி T.V. சாந்தா | 1. ஸ்ரீமதி கமலா & சுமைதாங்கி கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்<br>2. ஸ்ரீமதி R. மஹாலட்சுமி | ஸ்ரீ T.M. ராஜகோபாலன்<br>ஸ்ரீ. R. முகுந்தன் |
| 19.10.19 (சனி) | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. கீழச்சேரி ஸ்ரீ S. ராகவன் | ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட் | 1. Official Trustee of Tamilnadu CKD Mudaliar & Seshacharulu Trust<br>2. ஸ்ரீ. வஸந்த் ஷான்பாக் பூர்ணாஹூதி திருமஞ்ஜனம் ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி | ஸ்ரீ P.D. ராமஸ்வாமி ஐயங்கார் ட்ரஸ்ட் |

பட்டு பவித்ரங்கள் உபயம் : Dr. திலீப் க்ருஷ்ணா; பிரதி தினம் காலை, மாலை க்ஷீர கைங்கர்யம் உபயம் : ஸ்ரீமதி ஹேமலதா ரமாமணி

CONTRIBUTIONS IN KIND / CASH ARE WELCOME











தேவஸ்தான கட்டுமான திட்டம் - பூமி பூஜை





ஸ்ரீ:

# Desika Darsanam

## (A peek into the collection of Swami Desika's 28 Sthothras)

Sri U.Ve. Natteri Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

## Preamble

Sri Vedantha Desika, one of the premier Acharyas of our Sampradhaya, was born in the year 1268 A.D. at Thooppul, a part of Kancheepuram (about 75 kms from Chennai). He is considered as an incarnation of the Divine Bell (of the Lord of Thirumala), a fact well corroborated by his extra-ordinary, multi-faceted genius which manifested in the form of an astounding array of literary treasure.

Scholars aver that it is impossible not to get awe-struck by the remarkable appeal his works make for, his mastery over the nuances of the language (whether Sanskrit or Tamil) and the sheer volume and range of his works. It is not often that quality and quantity go together, but in our Acharya's case it would seem that they had but to compromise to forge an awesome combination.

**Veritable lion**

Swami Desika is a veritable lion amongst poets and logicians (Kavi-Tharkika Simham), a colossus in philosophy of Sri Vaishnavism and a prolific author. He has composed Sthothras, philosophical play, morals, Rahasya Granthas, epics, astronomical treatise, etc., numbering over 120.

His Sthothras are unique in form and substance. They are the outpourings of a pious and devoted heart in all its earnestness. Devotion is the nucleus of these works, and humility, the hallmark. His commitment to the philosophy born out of an unassailable conviction is written all over them.

We should consider it as a matter of great privilege that we live in an era in which we have ample opportunity to familiarise, learn and study the master's great works. But, unfortunately, not too many of us have the needed time, awareness or the inclination for this, as we are caught in the vicious cycle of mechanical, worldly life.

In a humble endeavour and with a view to helping people break free from the mundaneness, it is proposed to publish, from this issue, a series named Desika Darsanam – a peek into the collection of the Acharya's 28 Sthothras. Those of us who are



already conversant with them in varying degrees, can refresh and have our experience enriched.

The objective of the effort is to make people understand the greatness of Sri Desika through his hymns. As such, we are not going into the commentary or translation of them. Instead, we shall deal with the significance, background, salient features, interesting anecdotes, and benediction (Phala Sruthi) of each Sthothra.

We shall begin the series with Sri Hayagriya Sthothram and cover one or two hymn(s) per issue. Let us not stop with just reading this column, but follow it up with learning the Slokas and knowing their meanings, which will stand us in good stead.

Each of these hymns is unique in its own way and capable of granting auspiciousness if recited. Did Pillai Lokacharyar not say in his Thaniyan that prosperity beckoned those who learned even a single work of Swami Desika? – சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் . . . வானேறப்போமளவும் வாழ்வு.

ஸ்ரீ:

# 1. Sri Hayagriva Sthothram

Sri U.Ve. Natteri Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sri Hayagriva Sthothram, which sings the praise of Lord Hayagriva and invokes his grace, is not only the first of Swami Desika's hymns but also a must for everyone. Hayagriva (Haya translates to horse and Griva to neck, meaning the 'horse-necked') is considered as the 'God of Knowledge'.

Knowledge is the fulcrum of all virtues and it elevates the state of human mind. It is such a unique element that if once possessed, no external force can do any damage to it. So, it is perceived as the foremost among all wealth – others are subject to possible destruction. It is only in the fitness of things that our Acharya began his divine journey of hymn-singing with this Sthothra.

Legend has it that when there was a severe crisis to the survival of the Vedas, Lord Vishnu took the form of Hayagriva, and restored the treasure and gave them to Brahma. With face that of a horse and human body, this incarnation possesses four hands, the right hands sporting the Chakra and sign of wisdom (Jnana Mudhra) and the left holding the conch and book. He is seated on the white lotus with a crystal-like complexion and is an embodiment of knowledge and Pranava (Omkara) and an abode of unbridled compassion for His devotees.



The day of Hayagriva's incarnation is given as Aavani Sravanam (Thiruvonam). Little wonder that Desika, who shares the Star with his favourite deity, himself is an epitome of knowledge in all its resplendent radiance.


None less than Garuda, one who has the Vedas as his soul (Vedaathma), initiated our Acharya into the Hayagriva-Mantra on the Aushadha Giri (the Mountain of Medicine) in Thiruvahindrapuram, a place near Cuddalore (about 190 kms from Chennai). Sri Desika chanted the Mantra repeatedly and no sooner than he perfected it, a pleased Hayagriva presented Himself before our Acharya and poured his grace on him.

Sri Desika worshipped Lord Hayagriva in his Nithya Aradhana (daily worship). That is why, an idol of Lord Hayagriva is also installed wherever Desika's is.

Sri Hayagriva Sthothram comprises 33 Slokas (including the phala sruti), a majority of them being very simple and in flowing style.

**Some of the highlights of the work:**

- In the famous opening Sloka (Jnaanaanandhamayam Devam), Swami Desika offers his salutation as he describes the attributes of the deity: "We worship the horse-necked Lord Hayagriva who is the very personification of knowledge and bliss, whose form is like an unblemished crystal and who is the source of all kinds of learning."
- "I surrender unto Lord Hayagriva whose solid form is absolutely pure and



an epitome of knowledge, who has taken a vow to grant supreme knowledge (to His devotees), who is the very source of compassion and the refuge of all living beings." — Sloka No. 5 (Visudhdha Vignaana).

❖ In Sloka No. 7 (Dhaakshinya Ramya) Sri Hayagriva is referred as the benefactor of even Dhakshinamurthi (a form of Shiva), Saraswathi and Vyasa, reputed to be repositories of knowledge. They are what they are only because of the aura and power that Hayagriva has blessed them with, avers the author.

❖ Swami Desika's resolve to triumph over scholars of other ideologies and establish Sri Ramanuja's philosophy takes the form of a personal application to Lord Hayagriya, as he says, "O Lord, May You be seated on the throne — that is, the tip of my tongue — for, I am desirous of conquering the best of poets and logicians in philosophical debates presided over by profound scholars!" — Sloka No. 28 (Visesha Vith).

❖ The penultimate Sloka (Vyakhya Mudhraam) is the Dhyana Sloka in which Sri Desika contemplates the deity and describes the form, hue and posture of the 'God of Knowledge' and prays for His appearance, which the Lord was all too pleased to oblige to.

The Phala Sruthi in the final verse says that those who recite Hayagriva Sthothram with devotion would be blessed with true knowledge and proficiency in speech and poesy. Offering cardamom garland to Hayagriva, especially on Thursdays, is considered very special. Children and others who seek academic excellence would do well to worship Lord Hayagriva and recite this Sthothra.

***To be continued...***

**தேசிக மொழி**

ஸ்ரீசக்ரத்தாழ்வான்
எட்டு இதழுள்ள தாமரையில்
ஆறு கோணமுள்ள யந்த்ரத்தில்,
எட்டு திருக்கைகளிலும் சங்கு,
சக்கரம், வில், கோடரி, உலக்கை,
அங்குசம், கதை, தாமரை போன்ற
ஆயுதங்களை ஏந்திநின்று
ப்ரகாசிக்கின்றான்.

– பரமத பங்கம்

ஸ்ரீ:

# விகாரி வருட புரட்டாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர்/ அக்டோபர் | புரட்டாசி | | | | | |
| 18.09.19 | 1 | சதுர்த்தி | புதன் | அச்வினி (00.20) / பரணி | திருமால்வடை | |
| 19.09.19 | 2 | பஞ்சமி | வியாழன் | பரணி (03-38) 7.25AM | திருமால்வடை | |
| 20.09.19 | 3 | ஷஷ்டி | வெள்ளி | கார்த்திகை (5.31) 8.12 AM / ரோஹிணி | கலியன் | |
| 21.09.19 | 4 | ஸப்தமி | சனி | ரோஹிணி (8.32AM) | திருப்பாணாழ்வார் | |
| 22.09.19 | 5 | அஷ்டமி | ஞாயிறு | மிருகசிரீஷம் (6.01) | திருக்கச்சி நம்பிகள் | |
| 23.09.19 | 6 | நவமி | திங்கள் | திருவாதிரை (4.28) 7.48 AM | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 24.09.19 | 7 | தசமி | செவ்வாய் | புனர்வஸு (02-10) - 6.52AM / புஷ்யம் | ஸ்ரீராமர் | |
| 25.09.19 | 8 | ஏகாதசி | புதன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 26.09.19 | 9 | த்வாதசி (04.38) 7.50 AM / த்ரயோதசி | வியாழன் | மகம் | திருமழிசைப் பிரான் | |
| 27.09.19 | 10 | சதுர்தசி | வெள்ளி | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 28.09.19 | 11 | அமாவாசை | சனி | உத்தரம் | ஸ்ரீ தேசிகன் வார்ஷிக உத்ஸவத்திற்காக கண்ணாடி அறை எழுந்தருளல் | |
| 29.09.19 | 12 | ப்ரதமை | ஞாயிறு | ஹஸ்தம் | நவராத்ரி உத்ஸவம் 1ம் நாள் | ஸ்ரீ சேஷாத்ரி |
| 30.09.19 | 13 | த்விதீயை | திங்கள் | சித்திரை | நவராத்ரி உத்ஸவம் 2ம் நாள் | ஸ்ரீ K.R. ஸ்ரீநிவாஸன் |
| 01.10.19 | 14 | த்ருதீயை | செவ்வாய் | ஸ்வாதி | நவராத்ரி உத்ஸவம் 3ம் நாள் | ஸ்ரீ D. சேஷாத்ரி |
| 02.10.19 | 15 | சதுர்த்தி | புதன் | விசாகம் | நவராத்ரி உத்ஸவம் 4ம் நாள் | ஸ்ரீ N.R.S. ராமகிருஷ்ணன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03.10.19 | 16 | பஞ்சமி | வியாழன் | அநுஷம் | நவராத்ரி உத்ஸவம் 5ம் நாள் | ஸ்ரீ M.K. ராமஸ்வாமி குடும்பத்தினர் |
| 04.10.19 | 17 | ஷஷ்டி | வெள்ளி | கேட்டை | நவராத்ரி உத்ஸவம் 6ம் நாள் | P.D.R. ட்ரஸ்ட் C/O. ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 05.10.19 | 18 | ஸப்தமி | சனி | மூலம் | நவராத்ரி உத்ஸவம் 7ம் நாள் | ஸ்ரீ K.S. சேதுராமன் குடும்பத்தினர் |
| 06.10.19 | 19 | அஷ்டமி | ஞாயிறு | பூராடம் | நவராத்ரி உத்ஸவம் 8ம் நாள் | ஸ்ரீ V. ராமபத்ரன் |
| 07.10.19 | 20 | நவமி | திங்கள் | உத்தராடம் | நவராத்ரி உத்ஸவம் 9ம் நாள் மஹாநவமி | ஸ்ரீ S. நாராயணன், ஸ்ரீ T. நாராயணன் |
| 08.10.19 | 21 | தசமி | செவ்வாய் | திருவோணம் | ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை, விஜயதசமி உத்ஸவம் மாலை பெருமாள் புறப்பாடு அம்பு போடுதல் | விஜயதசமி: ஸ்ரீ A.R. ஸந்தான க்ருஷ்ணன், ஸ்ரீ A.K. முத்துஸ்வாமி |
| 29.09.19 (ஞாயிறு) முதல் 08.10.19 (செவ்வாய்) வரை 10 நாட்கள் **ஸ்ரீ தேசிகன் உத்ஸவம்** | | | | | | |
| 13.10.19 (ஞாயிறு) முதல் 19.10.19 (சனி) வரை 7 நாட்கள் **பவித்ரோத்ஸவம்** | | | | | | |

# ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு,
சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர்
தேவஸ்தானத்திற்குச் சொந்தமான
(G.K. மண்டபம் அருகில்) அறைகள்
வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**பங்கஜம் பாட்டீ:** இப்போ 9-வது ச்லோகத்த பாப்பமா-

*ஸாம்ஸ்க்ருதீபி: த்ராமிடீபி: பஹ்வீபி: க்ருதிபி: ஜநாந் |*
*யஸ்ஸமுஜ்ஜீவயாமாஸ தஸ்மை ச்ரேஷ்டாய மங்களம் ||*

இதன் பொருள்: எவர், தன்னுடைய வடமொழி-தென்மொழியிலான பலவகை க்ரந்தங்களால், உலகோரை உயிர்ப்பித்தாரோ, அந்தச் சிறந்தவர்க்கு நன்மை உண்டாகுக!

**ஸுமதி:** பாட்டீ! ஸ்வாமி தேசிகனுக்கு, தமிழில் நூல்கள் பண்ணுமளவுக்கு புலமை உண்டா?

**ஸுந்தரராஜன்:** அதுமட்டுமில்லை; அவர் காலத்துல இருந்த அந்தணர்கள் தமிழை, தாழ்ந்தவர்கள் பேசும் மொழி என இழிவாக கருதினா, அப்படீன்னு கேள்விப்பட்டேனே; நிஜமாவா?

**பங்கஜம் பாட்டீ:** வடமொழிக்கு அதிக முக்கியத்வம் கொடுத்தாளே தவிர, தமிழை மட்டமாக நினைத்தார்-னு இல்லை. ஏதோ ஒரு சிறுபான்மையினரான அரைவேக்காடுகள் அப்படிக் கருதியிருக்கலாம். மற்றபடி ஆசார்யாளோ பெரியவாளோ இருமொழிகளையும் தங்கள் இரு கண்களாத்தான் கருதிப் போற்றினா. இன்னும் சொல்லப்போனா, தேசிகன் தமிழை ரொம்ப ஒசத்தியாத்தான் பேசறார். உதாரணமா, பக்தர்களான பெரியவாளை 'தமிழ்வேதம் அறிந்த பகவர்' என்றும் / 'தூயதென்மறை வல்லவர் வாழவே' என்றும் வாழ்த்தினார்; தம்மை 'தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு' என அழைத்துக் கொள்வதில் பெருமைகொண்டார்; விண்ணுலகில் சென்றும் 'தமிழ்ப் பல்லாண்டு இசையுடன் பாடுவோமே' என்கிறார். இன்னும் தன்னுடைய த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில், தமிழை அகத்திய முநிவரால் கையாளப்பட்ட / பண் படுத்தப்பட்ட மொழி என முழங்குகிறார். திருவரங்கம்/ திருக்கச்சி முதலிய திவ்யதேசங்களிலே தமிழ்ப் பாசுரங்கள் பாடக்கூடாது-ன்னு எதிர்த்தவாள வாதத்தில வென்று, தமிழை நிலை நாட்டி, எம்பெருமான்களாலேயே 'வேதாந்தாசார்யர்' என விருதும்- திருச்சின்னமும் வழங்கப்பட்டார். இன்னும் இந்த இருமொழிப் பிணைப்பு எவ்வளவு இனிமை அப்படீங்கிறத்துக்குச் சான்றா எத்தனை 'மணிப்ரவாள க்ரந்தங்கள்' இயற்றியிருக்கார்!!

**ஸுமதி / ஸுந்தரராஜன்:** ஒங்களுக்கு இருக்கும் இந்த வேகமே, தேசிகனின் தமிழ்ப் பற்றுக்கு சான்று. எங்களுக்குப் புரியறது, பாட்டீ!

**ஸுந்தரராஜன்:** ச்லோகத்துல 'பஹ்வீபி: க்ருதிபி:' அப்படின்னு போட்டு இருக்கே; என்ன அர்த்தம் பாட்டீ!

**பங்கஜம் பாட்டீ:** அதுவா! எண்ணிக்கையிலும் நெறைய க்ரந்தங்கள் / வடமொழி-தமிழ் தவிர ப்ராக்ருதம் (கீழ் மட்டத்து மக்கள் பேசும் ஸம்ஸ்க்ருதம்)- மணி ப்ரவாளம் (வடமொழியும்-தமிழும் கலந்தது) போன்ற மற்ற மொழிகளிலும்-னு அர்த்தம்.

**ஸுமதி:** க்ரந்தங்களால, உலகத்தாரை உயிர்ப்பிக்க முடியுமா, பாட்டீ!

**பங்கஜம் பாட்டீ:** குழந்த! ஸம்ப்ரதாயத்த பத்தியும் / பெருமாளப் பத்தியும் ஸரியா தெரிஞ்சுக்காதவா உயிரோட இருந்தாக்கூட 'நடை பிணம்'தான். அப்படி இருக்கறவாள, உபதேசத்தால திருத்தற-ததான் உயிர்ப்பிக்கறது-னு சொல்றோம். இப்படி வேதமே சொல்றது.

**ஸுமதி:** இதெல்லாம் எதுக்காக பண்றார், பாட்டீ; அவருக்கு என்ன லாபம்?

**பங்கஜம் பாட்டீ:** (சிரிச்சிண்டே) இந்த மாதிரி ஒரு குட்டிப் பொண்ணு கேக்கும்-னு வரதாசாரியர் எதிர்பாத்தார் போல இருக்கு. அடுத்த ச்லோகத்தில பதில் சொல்றார் ...

*ய: க்யாதி-லாப-பூஜாஸு விமுக:, வைஷ்ணவே ஜநே |*
*க்ரயணீய தசாம் ப்ராப்த: தஸ்மை பவ்யாய மங்களம் ||*

இதுக்கு அர்த்தம்: எவர் ஒருவர், பெயர்-பணம்-புகழ்ச்சி இவைகள் பக்கம் ஏறெடுத்தும் பாராதவரோ; எவர், ஒரு வைஷ்ணவரைக் கண்ட மாத்திரத்தில் அவர்க்கு அடிமையாய் - விற்க/வாங்கும் அளவுக்கு உரிய வஸ்துவாய் - தம்மை நினைப்பவரோ, அப்படிபட்ட வணக்கம்/ ஒடுக்கம் உள்ளவர்க்கு மங்களம்.

இவரே, தன்னுடைய 'ஸாரஸார'த்தில், ஆசார்யர்களோட குணங்களச் சொல்லும்போது, 'பரக்கும் புகழ்வரும் பைம்பொருள் வாய்த்திடும் பத்தர்களாய் இரக்கின்றவர்க்கிவை ஈந்தால் அறமுளது என்று இயம்பார்'..'' என்கிறார். இவரே வேதாந்தாசார்யராயிற்றே! ஆக, லாபம் என்ற

பேச்சுக்கே இடமில்லை. 'தேசிகர் கன்றென நம்மை எண்ணி சுரக்கும் சுரபிகள்போல் சொரிகின்றனர் சொல்லமுதே' என்றபடி, மத்தவாள உய்யச்செய்யறது ஸ்வயம்ப்ரயோஜநமாகச் செய்பவர். இப்படி தன்னலமற்ற நோக்கோட மத்தவாள வாழவைக்கறது என்ற குணத்தால உயர்ந்தவராய் இருந்தும், வைஷ்ணவர்களைப் பொருத்தவரையில், அவர்கள் விற்கவோ-வாங்கவோ உரிமைகொண்ட பொருள்போல தம்மை ஆக்கிக்கொள்றது, என்ற அடக்கத்தன்மை கொண்டவர்; அவர்க்கு மங்களம் உரித்தாகுக, அப்படீங்கிறார்.

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! இதே அர்த்தத்தைக் கொடுக்கும் பாசுரம் ஒண்ணு நினைவுக்கு வரது. ப்ரபந்த வாத்யாரிடம் பெரியாழ்வார் திருமொழி சந்தை சொல்லிக்கிறேனோல்யோ; அதில 'நாவகாரியம்'-னு ஆரம்பிக்கும் பதிகத்தில ஒரு பாசுரம் (4.4.10).. ம்ம்ம் ....

*காசின்வாய்க்கரம் விற்கிலும்*
*கரவாது மாற்றிலி சோறிட்டு*
*தேசவார்த்தை படைக்கும்*
*வண்கையினார்கள் வாழ் திருக்கோட்டியூர்*
*கேசவா புருஷோத்தமா*
*கிளர் சோதியாய் குறளாவென்று*
*பேசுவார் அடியார்கள்*
*எந்தம்மை விற்கவும் பெறுவார்களே.*

**ஸுமதி:** பாட்டீ! நீங்க ரெண்டு பேரும் பேசிக்கறது எனக்கு ஒண்ணும் புரியல்ல. அண்ணா சொன்ன பாசுரத்துக்கு விளக்கமா அர்த்தம் சொல்றேளா!

**பங்கஜம் பாட்டீ:** சொல்றேன், கேளு. பாண்டிய நாட்டுல திருக்கோட்டியூர் வைஷ்ணவா, பாகவதாளுக்கு விசேஷமா ததீயராதனை பண்றத்தில பேர்பெற்றவா.

**ஸுமதி:** ஆமாம் பாட்டீ! ஒவ்வொரு வருஷமும் திருக்கோட்டியூர் தெப்ப உத்ஸவ ததீயாராதனை பத்ரிகை நமக்கு தவறாம வர்ரத பாத்திருக்கேன்.

**பங்கஜம் பாட்டீ:** ஆமாம். இது ஆழ்வார் காலத்திலேர்ந்து வழக்கமா நடந்திண்டிருக்கு. இதை அவர் அப்படியே படம்பிடிச்சுக் காட்றார் பாரு. ஒரு பஞ்ச காலத்தில, ஒரு பிடி அரிசியோட விலை, ஒரு தங்கக் காசா இருந்ததாம். அப்போதும் அந்த ஊர்க்காரா பாகவத-ததீயாராதனை பண்றத்த தொடர்ந்தாளாம். எந்த ப்ரதி பலனையும் எதிர்பாக்காம, இனிமையா ஜாதிப்பேச்சு பேசி, வயிரார படைப்பாளாம். அப்படி கொடுத்துச் சிவந்த கரங்கள்; பெருமான் திருப்பேரையே பேசும் அதரங்கள். அப்படிப்பட்ட ஊர்வாழ் பாகவதர்களுக்கு தாம் சேஷமாக ஆவதை தன் பேறாக, ஆழ்வார் கருதறார் – அதுவும் எப்படி! அவர்கள் தம்மை ஒரு பொருள்போல் விற்கவோ-வாங்கவோகூட உரிமையுள்ளவராவார், என்கிறார். இதே பாவத்தில ஸ்வாமி தேசிகனும், ''ஹரிபக்ததாஸ்ய ரஸிகா: பரஸ்பரம் க்ரய-விக்ரயார்ஹ தசயா ஸமிந்ததே'' என்கிறார். இதைத்தான் வரதாசார்யர் ''வைஷ்ணவே ஜநே க்ரயணீய தசாம் ப்ராப்த:'' என அநுபவிக்கிறார்.



**ஸுந்தரராஜன்:** பாட்டீ! அந்த ஊர்-ல இருக்கறதால, அவாளுக்கு இப்படிப் பட்ட குணம் வந்ததா; அல்லது, இப்படிப்பட்ட குணம் உடையவா இருக்கறதால, அந்த ஊருக்கு அப்படி பெயர் வந்ததா!!

**பங்கஜம் பாட்டீ:** ஒனக்கு நல்ல ரஸனைடா, கண்ணா! கோஷ்டீபுரம் அப்படி-னா, நல்ல Association–ன விரும்பறவா-னு அர்த்தம். ஆழ்வாரும், 'சாது கோட்டியில் கொள்ளப்படுவாரே' அப்படீன்னா ஆசைப்பட்டார். ஆக, ஊர் பெயருக்கு ஏத்த புருஷா; புருஷாளுக்கு ஏத்த பேர்கொண்ட ஊர்! தொண்டை மண்டலத்துக்காரருக்கு, பாண்டிய மண்டலத்துக் காராளோட ஸம்பந்தம் வைச்சுக்கணும்-ங்க்ற துடிப்புபோலும்!! 'பாண்டிய நாடு சோறுடைத்து' அப்படீன்னும் சொல்லலாமோ!

**(தொடரும்)**

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



*With Best Compliments From:*

**Pushpa Narasimhan & S. Narasimhan & Family**

Alamelumangapuram, Mylapore,
Chennai 600 004.

SVDD thanks Smt. Pushpa Narasimhan & Sri S. Narasimhan & Family for sponsoring this month's issue of Desika Sandesam









ஸ்ரீ உ.வே. வில்லூர் கருணாகராசார்யர் ஸ்வாமிக்கு ஜனாதிபதி விருது - பாராட்டு விழா







